## 84 லட்சம் ஏழைகளின் வயிற்றில் அடித்த ஆட்சிதான் பா.ஜ.க. ஆட்சி!

# பிரதமர் மோடி திருக்குறளைச் சொன்னால் தமிழ்நாட்டின் பசி தீர்ந்து விடுமா?

## பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து நெல்லையில் நடைபெற்ற கூட்டத்தில் நாடாளுமன்ற கழகக்குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!

**நெல்லை, பிப்.10-**

**திருக்குறளை சொன்னால் தமிழ்நாட்டின் பசி தீர்ந்துவிடுமா? 84 லட்சம் ஏழைகளின் வயிற்றில் அடித்த ஆட்சிதான் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி என தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டார்.**

**திருநெல்வேலியில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிரான மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் 8-2-2025 சனிக்கிழமை அன்று நடைபெற்றது.**

**இதில் கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கண்டன உரையாற்றினார்.**

கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசியதாவது :

"நான்கூட யோசித்தேன்… ஏன் என்னை திருநெல்வேயில் பட்ஜெட் கண்டனப் பொதுக் கூட்டத்தை நடத்த அனுப்பியிருக்கிறார் என்று. ஏனென்றால் சென்ற ஆண்டு பட்ஜெட்டில் பெரிய அல்வா கிண்டினார்கள். அந்த அல்வாவில் நமக்கு தமிழ்நாட்டுக்கு கொஞ்சம் கொடுக்கப் போவதாக சொன்னார்கள். ஆனால் கொடுக்கவில்லை.

ஆனால் இந்த ஆண்டு பட்ஜெட்டில் எந்த அல்வாவும் வரவில்லை. அதனால் அல்வாவுக்கு பெயர் போன திருநெல்வேலியிலே போய், அங்கே கிண்டிக் கொண்டிருக்கக் கூடிய பட்ஜெட் அல்வாவை பற்றி பேசிவிட்டு வா என்று அண்ணன் என்னை அனுப்பியிருக்கிறார் என நினைக்கிறேன்.

நேற்று நம்முடைய தமிழகத்தின் முதல்வர் அண்ணன் தளபதி அவர்கள் திருநெல்வேலிக்கு வந்து ஏறத் தாழ 1060 கோடிக்கான பணிகளை, திட்டங்களை துவக்கி வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

### தமிழ்நாட்டை காக்கும் திராவிட மாடல் அரசு!

யார் பட்ஜெட்டில் நிதி ஒதுக்கினாலும், நிதி ஒதுக்காவிட்டாலும் என்னுடைய மக்களுக்கான திட்டங்களை நான் தொடர்ந்து வழங்குவேன் என்று தளபதி சொல்கிற ஆட்சிதான் திராவிட மாடல் ஆட்சி.

டெல்லியில் ஒரு ஆட்சி நடக்கிறது. அந்த ஆட்சி எப்படிப்பட ஆட்சி என்றால், நமக்கு பட்ஜெட்டில் கிள்ளியும் கொடுக்க மாட்டார்கள். நிதியமைச்சர் தமிழர் இல்லையென்று சொன்னால் கோபம் வந்துவிடும். அவர் தமிழர் இல்லை என்று நாங்கள் சொல்லவில்லை. மகிழ்ச்சியோடு தமிழச்சியாக ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் தமிழுணர்வோடு கொஞ்சம் செயல்படுங்கள்.

தமிழ்நாட்டுக்கு நிதி கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள். ஒரே ஒரு திருக்குறளை சொன்னால் தமிழ்நாட்டின் பசி தீர்ந்துவிடுமா? நீங்கள் எங்களுக்கு திருக்குறள் சொல்லித் தர வேண்டிய அவசியமில்லை. திருக்குறள் எங்களுடைய மண் சார்ந்தது. திருக்குறளுக்கு உரை எழுதியவர் தலைவர் கலைஞர். திருவள்ளுவருக்கு சிலையெடுத்தவர் தலைவர் கலைஞர். எங்களுக்கு நிதியைக் கொடுங்கள்… திருவள்ளுவரையும், திருக்குறளையும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.

தமிழ்நாட்டுக்கு ஒன்றும் செய்யவில்லையே என்று கேட்டால், பிரதமர் எங்கே போனாலும் திருக்குறள் சொல்கிறார் என்கிறார்கள். நீங்கள் சொன்னால்தான் அது திருக்குறள் என்று தெரிகிறது. திருக்குறள் என்று நினைத்துக் கொண்டு அவர் சொல்கிறார். வேறு மொழி பேசக் கூடியவர்களின் உச்சரிப்பு அப்படித்தான் இருக்கும். எனக்கே கூட இந்தி பேசுவது கஷ்டம். அதுவும் ஆங்கிலத்தில் எழுதி வைத்துப் படித்தால் கூட கஷ்டம் தான்.

### இந்தித் திணிப்பில் தீவிரம் காட்டுகிறார்கள்!

அவர்களைப் பொறுத்தவரைக்கும் இந்தியைப் படித்தால்தான் இந்த நாட்டில் நாம் இருக்கிறோம் என்று அர்த்தம். அவர்கள் யாரும் தமிழ் கற்றுக் கொள்ள மாட்டார்கள்… கன்னடம், மலையாளம், தெலுங்கு கற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் நாம் இந்தி கற்றுக் கொள்வதுதான் அவர்களுக்கு தெரிந்த தேசியம்.

ஒன்றிய அரசின் நிதியமைச்சர் பட்ஜெட்டை படித்துக் கொண்டிருந்த நேரத்திலே, ஏதாவது ஒரு இடத்திலே தமிழ்நாடு என்று தப்பித் தவறி வந்துவிடுமா என்று காத்துக் கொண்டிருந்தேன். ஆனால். தமிழ்நாடு என்ற வார்த்தை கூட வரவில்லை.

அதனால்தான் எனது ட்விட்டர் பக்கத்திலே, 'இத்தனை ஆண்டு பாராளுமன்ற வாழ்க்கையிலே நான் முதல் முறையாக பிகாரின் பட்ஜெட்டை பார்க்கக் கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது' என்று குறிப்பிட்டிருந்தேன்.

### உங்களைவிட சிறந்த ஆட்சி தமிழ்நாட்டில் நடக்கிறது!

அதற்கு சில பேர் பதில் சொன்னார்கள்… கனிமொழிக்கு பட்ஜெட் புரியுமா என்று கேட்டார்கள். பட்ஜெட்டை சில பேர்தான் எழுத முடியும், சில பேர்தான் படிக்க முடியும் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருந்தால் அந்த காலம் மலையேறிவிட்டது இன்று உங்களை விட திறமையாக ஒரு ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் மாநிலத்தைச் சேர்ந்தவள் என்ற பெருமை எனக்கிருக்கிறது.

ஜிடிபி என்கிறீர்களே… தமிழ்நாட்டின் ஜிடிபி தேசிய ஜிடிபியை தாண்டி போய்க் கொண்டிருக்கிறது. ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஓபிசி முதலமைச்சரின் ஆட்சி தமிழ்நாட்டிலே நடந்துகொண்டிருக்கிறது. இதில் யாரும் குறை கண்டுபிடிக்க முடியாது. அந்த அளவுக்கு எல்லாருக்குமான திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்.

தமிழ்நாட்டுக்கான வரியை நாமே போடக் கூடிய வாய்ப்பு அன்று நமக்கு இருந்தது. ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள்? ஒரே நாடு ஒரே வரியைக் கொண்டு வந்தீர்கள். இதனால் மாநிலங்களுக்கு ஏற்படும் இழப்புக்கு நியாயம் செய்யப்படும் என்று சொன்னீர்கள். ஆனால் இன்று தமிழ்நாட்டுக்குரிய ஜிஎஸ்டி பங்களிப்பு வழங்கப்படவே இல்லை..

உங்களுக்குத் தெரியும், இன்று எதை வாங்கினாலும் ஜிஎஸ்டி. சின்னச் சின்ன கடைகளில் இருக்கக் கூடிய பொருட்களுக்கு கூட ஜிஎஸ்டி வரி விதிக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் தமிழ்நாடு ஜிஎஸ்டி வரி கட்டிக் கொண்டிருக்கிறது.

### வரி ஒதுக்கீட்டிலும் வஞ்சிக்கும் ஒன்றிய அரசு!

ஆனால் தமிழ்நாட்டுக்கு ஜிஎஸ்டி பங்காக 58 ஆயிரம் கோடி ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் தமிழ்நாடு அளவுக்கு ஜிஎஸ்டி வரி பங்களிப்பு செய்யாத உத்திரப்பிரதேசத்துக்கு எவ்வளவு கொடுக்கிறார்கள்? 2 லட்சத்து 55 ஆயிரம் கோடி ரூபாய். காதில் விழுந்ததா?

இதை இன்னும் தெளிவாக சொல்ல வேண்டுமென்றால்… தென்னிந்தியாவில் இருக்கக் கூடிய ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு என எல்லா மாநிலத்துக்கும் சேர்த்து ஒன்றிய அரசு தரும் ஜிஎஸ்டி தொகை 2 லட்சத்து 24 ஆயிரம் கோடி. ஆனால் உத்திரப்பிரதேசத்துக்கு மட்டுமே…. பாஜக தொடர்ந்து ஆளும் உத்திரப்பிரதேசத்துக்கு மட்டுமே 2 லட்சத்து 55 ஆயிரம் கோடி. இதை எந்த விதத்தில் நியாயம் என்று நாம் ஏற்றுக் கொள்ள முடியும்?

உபி வளரவில்லை., அதனால் அதை முன்னேற்ற வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது என இதற்கு பதில் சொல்கிறார்கள். நான் கேட்கிறேன்… உங்கள் பாஜகவிலே இருக்கக் கூடியவர்கள் மேடையில் பேசும்போது, 'பாருங்க உபி எப்படி வளர்ந்திருக்கிறது என்று? உபியை யோகி எப்படி வளர்த்திருக்கிறார் பாருங்கள்… உலகத்திலேயே உபி மாதிரி ஒரு மாநிலம் இல்லை' என்று நீங்கள்தானே பேசுகிறீர்கள்.

அப்படியென்றால் உபி வளர்ந்திருக்கிறதா? இல்லையா? தெளிவான ஒரு முடிவைச் சொல்லுங்கள். அப்படி வளர்ந்திருந்தால், எதற்கு எங்கள் காசை எடுத்து அவர்களிடம் கொடுக்கிறீர்கள்? அப்படி வளரவில்லை என்றால் இத்தனை வருஷமாக கொட்டிக் கொடுத்த காசை வைத்துக் கொண்டு என்ன செய்தார்கள் என்ற கேள்வி யாவது கேளுங்கள்.

இது எதையுமே கேட்காமல்… தமிழ்நாட்டின் வரிப் பங்கை நமக்குத் திருப்பித் தராமல், ஒவ்வொரு நிதி நிலை அறிக்கையிலும்… தமிழ்நாட்டை நோகடிக்கக்கூடிய வகையிலே, தமிழ் மக்களை சுரண்டக் கூடிய வகையிலே பட்ஜெட்டை போடுவது நியாயமா?

ஜிஎஸ்டி கொண்டுவரும்போது, இதனால் தமிழ்நாட்டுக்கு இழப்பு ஏற்படும் என்று சொன்னோம். அந்த இழப்பு 20 ஆயிரம் கோடி. அதை தந்துவிடுகிறோம் என்று சொன்னீர்கள். கொடுத்தீர்களா? கொடுக்கவில்லை.

### ரயில்வே துறையிலும் தமிழ்நாட்டுக்கு ஓரவஞ்சனை!

அடுத்து ரயில்வேயில் தமிழ்நாட்டில் இருந்து ரயில்வேக்கு போகக் கூடிய வருவாய் கிட்டத்தட்ட 18 ஆயிரம் கோடி ரூபாய்.



ஆனால் தமிழ்நாட்டுக்கு அவர்கள் ரயில்வேயில் தந்திருப்பது 6, 500 கோடி ரூபாய். ஆனால் மகாராஷ்டிராவுக்கு ரயில்வே திட்டங்களுக்காக 23 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். உபிக்கு 3 மடங்கு அதிகம். ஒரே நாட்டில் தமிழ்நாட்டில் இருந்து அதிக வரி வருவாயை எடுத்துக் கொண்டு, நியாயமாக ஒதுக்க வேண்டிய நிதியை ஒதுக்க மறுக்கிறீர்கள். கேட்டால் தமிழ்நாடு முன்னேறிய மாநிலம் என்கிறீர்கள். தமிழ்நாடு முன்னேறிய மாநிலமாக இருப்பதற்குக் காரணம் திராவிட மாடல் ஆட்சி என்பதையாவது ஏற்றுக் கொள்ளுங்கள்.

தந்தை பெரியாரில் தொடங்கி அவரின் கருத்தியலை உள்வாங்கிக் கொண்டு பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், இன்று நமது முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் நடத்திக் கொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சி, எல்லாரையும் திரும்பிப் பார்க்க வைக்கும் ஆட்சி என்பதை ஒப்புக் கொள்ளுங்கள். அதையும் ஒப்புக் கொள்ள மாட்டீர்கள். தமிழ்நாட்டுக்குரிய வரிப் பங்கீட்டையும் தர மாட்டீர்கள்.

ஒருவரைப் பார்த்து, 'நீ நல்லா இருக்கே… நல்லா இருக்கே' என்று சொல்லிக் கொண்டே அவரிடம் இருப்பதை எல்லாம் வாங்கிக் கொண்டு போனீர்கள் என்றால்… அவர் எவ்வளவு நாளைக்கு நன்றாக இருக்க முடியும்?

முன்னேறிய மாநிலமாக தற்சார்பு மாநிலமாக இருக்கக் கூடிய தமிழகத்தை அந்த நிலையில் இருந்து விலகும் நிலைக்கு ஏன் கொண்டு போய் தள்ளுகிறீர்கள்?

பிகாருக்கு கொடுக்கிறீர்கள், உபிக்கு கொடுக்கிறீர்கள். எங்களுக்கு பிரச்சினை இல்லை. கொடுங்கள். எல்லாரும் முன்னேறட்டும். இதைத்தான் திராவிட மாடல் ஆட்சி நினைக்கக் கூடியது.

### தமிழ்நாட்டை பின்னோக்கித் தள்ள முயற்சிக்கும் மோடி அரசு!

ஆனால், கல்வியில் மருத்துவத்தில் தொழில் முதலீடுகளில், உள்கட்டமைப்பில் முன்னேற்றம் கண்டு, அதேநேரம் மக்கள் தொகையையும் கட்டுக்குள் வைத்திருக்கும் ஒரு மாநிலத்தை பாராட்ட வேண்டுமா? அல்லது நீங்கள் முன்னேறிவிட்டீர்கள். உங்களுக்கு ஒன்றும் கிடையாது என்று பின்னோக்கித் தள்ள வேண்டுமா?

மறுபடியும் நாங்கள் பிச்சைப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு நாங்கள் வரவேண்டும் என்று எதிர்பார்க்கும் மனப்பான்மையைத் தான் இதில் பார்க்கமுடிகிறது.

தமிழ்நாட்டில் மழை, வெள்ளம் வருகிறது. மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டார்கள். பெஞ்சல்., மிக்ஜாம் புயல்களால் தமிழ்நாடு கடுமையாக பாதிக்கப்பட்டது. திருநெல்வேலி, தூத்துக்குடி எவ்வளவு கடுமையாக பாதிக்கப்பட்டது என்பதை பார்த்தோம். ஒன்றிய அரசின் நிதியமைச்சர் வந்தார், பார்த்தார், சென்றார். ஆனால் நிதி வந்ததா? இல்லை.

நிதிப்பங்கீடும் நியாயமாக இல்லை. புயல், வெள்ளம் போன்ற இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்படும்போதும் மனிதாபிமானத்தோடு நீங்கள் நடந்துகொண்டதே இல்லை. பரிதவித்த மக்களுக்காக நம்முடைய முதலமைச்சர் கேட்ட நிவாரணத் தொகையை தந்ததே இல்லை.

அப்படியென்றால் தமிழ்நாடு பற்றிய உங்கள் எண்ணம் என்னவாக இருக்கிறது என்று கேட்பதற்காகத்தான் இந்த கண்டனப் பொதுக் கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

### புதிய கல்விக் கொள்கை எங்களுக்குத் தேவையில்லை!

புதிய கல்விக் கொள்கை ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கே இருக்கும் ஒன்றிய பாஜக அரசு கல்வி பொதுப்பட்டியல் என்பதையே மறந்துவிட்டு… அவர்கள் ஒன்றிய பட்டியலில் இருப்பது மாதிரி நினைத்துக் கொண்டு புதிய கல்விக் கொள்கையைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஒரு மலைப் பகுதியை எடுத்துக் கொண்டால் ஒரு பிள்ளை, இரு பிள்ளைகள் இருந்தால் கூட எல்லாருக்கும் கல்வியை கற்றுத் தர வேண்டும் என்று நினைக்கக் கூடிய மாநிலம் தமிழ்நாடு. இரு பிள்ளைகள் படித்தாலும் அந்த பள்ளிக் கூடத்தை மூடாமல் நடத்தக் கூடிய மாநிலம் தமிழ்நாடு.

ஆனால் அவர்கள் புதிய கல்விக் கொள்கையில் என்ன சொல்கிறார்கள்? ஐந்து, பத்து பிள்ளைகள் படித்தால் அந்த பள்ளிக் கூடத்தை மூடுங்கள் என்று சொல்கிறார்கள். எல்லா பிள்ளைகளையும் ஒரே இடத்தில் கொண்டு வாருங்கள் என்கிறார்கள். சர்வ சிக்ஷ்யா அபியான் என்ற திட்டத்துக்கான நிதியைக் கேட்டால், இந்தி சொல்லிக் கொடுக்கும் புதிய கல்விக் கொள்கையில் கையெழுத்து போடு அப்போதுதான் நிதி ஒதுக்குவேன் என்கிறார்கள்.

இதற்கு என்ன பெயர்? இந்த அகங்காரம் ஆணவ எதேச்சதிகாரத்தை எதிர்த்துதான் நாம் இந்த கண்டனப் பொதுக்கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

பிகாருக்கு தேர்தல் வருகிறது. அதனால் பட்ஜெட்டில் அதிக நிதியை ஒதுக்குகிறார்கள். தமிழ்நாட்டில் தேர்தல் வந்தாலும் மக்கள் பாஜகவுக்கு ஓட்டுப் போடப் போவது கிடையாது. அதனால்தான் தமிழ்நாடு என்ற பெயரே பட்ஜெட்டில் இல்லை.

### எந்தத் திட்டங்களும் தமிழ்நாட்டிற்கு இல்லை!

கோவை மெட்ரோ பட்ஜெட்டில் வந்ததா இல்லை,. மதுரை மெட்ரோ வந்ததா இல்லை. எயிம்ஸ் மருத்துவமனை? அதுவும் இல்லை. திருநெல்வேலிக்கு ஏதும் திட்டம் வந்திருக்கிறதா இல்லை.

நான் கேட்கிறேன்… நம்முடைய முதலமைச்சர் பெருமையாக அறிவித்தார். இந்தியாவிலேயே மிகுந்த தொன்மையான இரும்புக் காலம் பற்றிய ஆதாரங்கள் கண்டெடுக்கப்பட்டது தமிழ்நாட்டில், அதுவும் பக்கத்தில் இருக்கக் கூடிய தூத்துக்குடியில் சிவகளையில்.

தமிழ்நாடு, தமிழின் பெருமை எல்லாம் பேசக் கூடிய நமது பிரதமர் தமிழ்நாட்டின் இரும்புத் தொன்மை பற்றி இதுவரை ஒரு வார்த்தை பேசியிருக்கிறாரா? தமிழ்நாடு முதலமைச்சர் ஒன்றும் இதையெல்லாம் வாய் வார்த்தையாக சொல்லவில்லை. அறிவியல் பூர்வமான ஆதாரங்களோடு பகுப்பாய்வு சோதனை முடிவுகளோடு… தமிழ்நாடு 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இரும்புத் தொன்மை மிக்கது. இரும்பைப் பயன்படுத்திய பண்பட்ட நாகரிகமாக, வியந்து பார்க்கும் நாகரிகமாக இருந்திருக்கிறார்கள் என்று நிறுவியிருக்கிறார்.

தமிழ்நாட்டைச் சொல்லாமல் இந்திய வரலாற்றை அல்ல, இனி உலக வரலாற்றையே யாரும் எழுத முடியாது என்ற வகையில் இந்த ஆய்வு முடிவுகள் சொல்கின்றன.

'இதுபற்றி பாரத பிரதமர் ஒரு வார்த்தையாவது சொல்லியிருக்கிறாரா? இல்லை. ஏனென்றால் அவர்களுடைய கலாச்சாரம், பண்பாடு என்பது வேறு. அதனால்தான் நம்முடைய தமிழ்நாட்டுக்கு கிடைத்த இந்த பெருமை அவர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது.

நீங்கள் குடும்ப பட்ஜெட் போடுவீர்கள். மளிகை சாமானுக்கு ஒரு மாதம் 2 ஆயிரம் ரூபாய் என்று பட்ஜெட் போடுகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் மளிகை சாமானுக்கு 2,500 ரூபாய் செலவாகிறது. அப்போது என்ன செய்வீர்கள்? அடுத்த மாதம் மளிகை சாமானுக்கு 2500 ரூபாய் ஒதுக்குவோம். அல்லது இதில் ஏதேனும் குறைக்க முடியுமா என்று பார்ப்போம். அடுத்த மாதமும் 2500 ரூபாய் ஆகிறது என்றால் 2500 ரூபாய்தான் எடுத்து வைத்துவிடுவோம்.

100 நாள் வேலை என்று சொல்லக் கூடிய மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டம் என்று இருக்கிறது. அந்தத் திட்டத்துக்கு ஒன்றிய அரசு ஒதுக்கும் நிதி என்பது ஒவ்வொரு ஆண்டும் குறைந்துகொண்டே வருகிறது. ஆனால் அந்த திட்டத்துக்கான நிதித் தேவை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

### வேலையில்லா திண்டாட்டத்தை உருவாக்கியுள்ள மோடி அரசு!

ஒவ்வொரு ஆண்டும் 2 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருவோம் என்று உறுதி சொல்லி ஆட்சிக்கு வந்தவர் மோடி. ஆனால் குடியரசுத் தலைவர் உரையிலே நாங்கள் 10 லட்சம் வேலைகளை உருவாக்கியிருக்கிறோம் என்று பெருமையோடு சொல்கிறார்கள். இந்திய வரலாற்றிலேயே இப்படி ஒரு நிலை இல்லை என்ற அளவுக்கு வேலையில்லா திண்டாட்டத்தில் கொண்டு வந்து நிறுத்திவிட்டு… கிட்டத்தட்ட 84 லட்சம் பேரை நூறு நாள் வேலை வாய்ப்பில் இருந்து நீக்கியிருக்கிறார்கள்.

இந்தியாவின் கிராமப்புறங்களில் இருக்கக் கூடிய 84 லட்சம் ஏழைகளின் வயிற்றிலே அடித்திருக்கக் கூடிய ஆட்சிதான் ஒன்றியத்தில் இருக்கக் கூடிய பாஜக ஆட்சி. நானும் நிதியமைச்சரும் சென்று அங்கே இருக்கக் கூடிய துறை சார்ந்த அமைச்சரை சந்தித்து தமிழ்நாட்டுக்கான நிதியை ஒதுக்குங்கள் காத்திருக்கிறோம் என்று கூறினோம். ஆனால் 100 நாள் வேலை திட்டத்துக்கான நிதியைத் தொடர்ந்து குறைத்து வருகிறார்கள்.

ஒரு அரசு என்பது மக்கள் மீது அக்கறை கொண்ட அரசாக இருக்க வேண்டும். ஆனால் ஒரு வருடத்தில் குறைந்தது 100 நாளாவது மக்களுக்கு வேலை தரக் கூடிய உணவு தரக் கூடிய அடிப்படைப் பாதுகாப்பு கொடுக்கக் கூடிய திட்டத்தை படிப்படியாக குறைத்து மூடும் அரசுதான் ஒன்றிய பிஜேபி அரசு.

அவர்களுக்கு தமிழ்நாடு என்றாலே பிடிக்காது. ஏனென்றால் எந்த காலத்திலும் இங்கே ஆட்சிக்கு வர முடியாது. பிகாருக்கு இந்த பட்ஜெட்டிலேயே இரு விமான நிலையங்கள், அதை விரிவாக்குவதற்கான அறிவிப்புகள்…. ஆனால் நம் மாநிலத்துக்கு எதுவும் கிடையாது.

### உயர் கல்வியையும் தம் வசப்படுத்த துடிக்கும் ஒன்றிய அரசு!

யுஜிசி கொள்கைகளில் மாற்றங்களைக் கொண்டுவந்து நம்முடைய கல்லூரிகளை ஒன்றிய அரசு தன்னுடைய கையிலே வைத்துக் கொள்ள வேண்டும் என்று துடிக்கிறது. அதற்காகத்தான் டெல்லியில் நமது மாணவரணி ஒரு ஆர்பாட்டம் நடத்தியது. அந்த ஆர்பாட்டத்திலே பல கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர். தங்களது கருத்துகளைத் தெரிவித்தனர். ஒரு பல்கலைக் கழகத்துக்கு முதல்வராக வரக் கூடியவர், கல்வியாளராக இருக்க வேண்டும், அந்த துறை சார்ந்தவராக இருந்தால்தான் அவரால் நிர்வாகம் செய்ய முடியும். ஆனால், இவர்கள் கொண்டுவந்திருக்கும் மாற்றம் யாரை வேண்டுமானாலும் கொண்டுவரலாம் என்பது.

நீட்டை கொண்டுவந்து மருத்துவக் கல்லூரிக்கு நம் பிள்ளைகள் போக முடியும் என்ற நிலையை மாற்றிவிட்டார்கள். இப்போது எல்லா கல்லூரிகளுக்கும் நுழைவுத் தேர்வு என்பதுதான் யுஜிசி கொண்டுவரும் முக்கியமான மாற்றங்களில் ஒன்று.

கல்லூரிக்கு நுழைவுத் தேர்வு என்றால் சின்னச் சின்ன ஊர்களில் இருக்கும் கிராமப்புற பிள்ளைகள் கல்லூரிகளுக்குள் நுழையவே முடியாது. ஏற்கனவே உயர் கல்விக்கு போகும் மாணவர்கள் எண்ணிக்கையில் தேசிய சராசரியை விட தமிழ்நாடு மிக உயர்ந்த இடத்தில் உள்ளது. அதை அழிக்கக் கூடிய வகையிலேதான் நுழைவுத் தேர்வை கொண்டுவரத் துடிக்கிறார்கள். இது நுழைவுத் தேர்வு அல்ல. சாதாரண ஒடுக்கப்பட்ட பின் தங்கிய கிராமப்புற மாணவர்கள் கல்லூரிகளுக்குள் நுழைவதைத் தடுக்கக் கூடிய தேர்வு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

### யாருக்கும் அடிமைகளாக நாங்கள் இருக்க மாட்டோம்!

இந்தியைத் திணிப்பதில் காட்டக் கூடிய ஆர்வம், நமது பிள்ளைகள் படிக்கக் கூடாது என்பதில் காட்டக் கூடிய ஆர்வம், தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற எண்ணம் இதை எதிர்த்துதான் இந்த கூட்டம் நடந்துகொண்டிருக்கிறது.

அவர்கள் பட்ஜெட்டில் நம்மைத் தவிர்த்திருக்கலாம். நிதி நெருக்கடியை உருவாக்கி இவர்களை வென்றுவிடலாம் என நினைக்கலாம். ஆனால் தமிழர்கள் முதலமைச்சர் இந்த உலகத்துக்கு சொன்ன மாதிரி 5 ஆயிரம் ஆண்டுக்கும் மேற்பட்ட தொன்மையும் தொடர்ச்சியும் மிக்க மொழிக்கு சொந்தக்காரர்கள். அதனால் யாருக்கும் அடிமைகளாக, யாருக்கும் குறைந்தவர்களாக, யாரும் வெல்லக் கூடியவர்களாக நாங்கள் இல்லை.

எங்களுக்கு எதிர்க்கக் கூடியவர்களுக்கு பாடம் புகட்டுவோம். எங்களை எதிர்ப்பவர்களை வென்றே தீருவோம்".

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.